# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:99** **தேதி:-22.02.2016**

## விரிவடைந்த மத்திய செயற்குழு

அன்பார்ந்த தோழர்களே,

மஹாராஷ்ட்ரா மாநிலம் அஹமது நகரில் BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மத்திய செயற்குழுக் கூட்டம் 19.02.2016 முதல் 21.02.2016 வரை மிகச்சிறப்பாக நடைபெற்றது. BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர் சிங் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய சங்க நிர்வாகிகள், மாநில செயலாளர்களுடன் அனைத்து மாவட்ட செயலாளர்களும் பங்கேற்றனர். எதிர் வரும் ஏழாவது சங்க அங்கீகார தேர்தலை சந்திக்கும் உற்சாகத்துடன் தோழர்கள் பங்கேற்ற இந்த விரிவடைந்த மத்திய செயற்குழுவில் தேசியக் கொடியினை தலைவர் தோழர் பல்பீர் சிங் ஏற்றி வைக்க, நமது சங்கக்கொடியினை BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு விண்ணதிரும் முழக்கங்களுக்கிடையே ஏற்றி வைத்தார்.

தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் அனாம்பிரேம் என்கிற பார்வையற்றோர் அமைப்பின் சார்பாக உணர்ச்சிகரமான கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் மகாராஷ்ட்ரா மாநில செயலாளர் தோழர் நளவாடே, வரவேற்புக்குழுவின் தலைவர் தோழர் விட்டல் அவுட்டி, மற்றும் பொது செயலாளர் தோழர் விஜய் ஷிபங்கர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள். இந்த விரிவடைந்த மத்திய செயற்குழுவை மஹாராஷ்ட்ரா மாநில CITU பொது செயலாளர் டாக்டர் கரட் துவக்கி வைத்தார். BSNL ஊழியர் சங்கத்தின் புரவலர் தோழர் VAN நம்பூதிரி மற்றும் அஹமது நகர் பொது மேலாளர் திரு சொமானி ஆகியோர் உரையாற்றினர். பின்னர் கடந்த மூன்றாண்டுகளில் BSNLன் புத்தாக்கத்திற்காகவும், ஊழியர்களின் பிரச்சனைகளின் தீர்விற்காகவும் BSNL ஊழியர் சங்கம் செய்துள்ளவற்றை நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு விரிவாக விளக்கி பேசினார்.

அதன் பின்னர் நடைபெற்ற விவாதத்தில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை உள்ள அனைத்து மாநிலங்களிலுமிருந்து வந்திருந்த தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா உள்ளிட்ட மத்திய சங்க நிர்வாகிகளும் விவாதத்தில் பங்கேற்றனர். நமது தமிழகத்தின் சார்பில் தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், நாகர்கோவில் மாவட்ட செயலாளர் தோழர் M.ஜார்ஜ் மற்றும் சேலம் மாவட்ட உதவி செயலாளர் தோழர் S.ஹரிஹரன் ஆகியோர் பங்கேற்றனர். 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு, ”இன்முகத்துடன் சேவை”, நிலுவையில் உள்ள ஊழியர்களின் பிரச்சனைகள் ஆகியவை இந்த விவாதங்களின் முக்கிய கருவாக இருந்தது. விவாதங்களின் அடிப்படையில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1) BSNLஐ பாதுகாக்க, நல்லதொரு ஊதிய மாற்றம் மற்றும் பஞ்சப்படி இணைப்பை பெற, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என ஐந்து கட்ட பதவி உயர்வினை பெற, ஊதிய தேக்க நிலைக்கு தீர்வு காண, DOT மற்றும் BSNLல் நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களின் கோரிக்கைகளை வென்றடைய மற்றும் SC/ST ஊழியர்களின் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகளும், ஒன்று பட்ட போராட்டங்களும் தேவை. ஒற்றுமை மற்றும் போராட்டங்களின் நாயகன் BSNL ஊழியர் சங்கம் தான் என கடந்த கால அனுபவங்கள் தெளிவாக தெரிவிக்கின்றன. எனவே 10.05.2016 அன்று நடைபெற உள்ள 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலில் BSNL ஊழியர் சங்கத்திற்கு வாக்களிக்க வேண்டும் என BSNLல் உள்ள அனைத்து ஊழியர்களையும் இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

2) FORUM அறைகூவல் விட்டுள்ள "இன்முகத்துடன் சேவை" திட்டத்தை இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு முழு மனதுடன் வரவேற்கின்றது. இந்த திட்டத்தை அமுல்படுத்துவதில் தற்போது ஏற்பட்டுள்ள வேகத்தை குறைக்காமல், நூறு நாட்களும் சிறப்பாக கொண்டு செல்ல வேண்டும். 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் பிரச்சாரத்தின் காரணமாக "இன்முகத்துடன் சேவை" திட்டம் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்கின்ற எச்சரிக்கையினை இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு விடுத்துள்ளது.

3) உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்காக பணியாற்றுபவர்கள், இந்திய நாட்டை மத அடிப்படையில் பிரிப்பதற்காக முயற்சி செய்கின்றனர். IIT சென்னை, FILM AND TELEVISION INSTITUTE OF INDIA,, ஹைதராபாத் மத்திய பல்கலைக் கழகம், ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம், ஜாதவ்பூர் பல்கலைக் கழகம் உள்ளிட்டவைகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இதற்கு உதாரணம். (ரோஹித் வெமுலாவின் தற்கொலை, கன்னையா குமாரின் கைது உள்ளிட்டவை). இது போன்ற அரசியல் அமைப்பு சட்டம் மக்களுக்கு கொடுத்த உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்களை இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கண்டிக்கின்றது. அரசியல் அமைப்பு சட்டம் மக்களுக்கு வழங்கிய உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்களை தொடுக்கும் அனைத்து கருத்தோட்டங்களையும் நிராகரிக்க வேண்டும் என அனைத்து BSNL ஊழியர்களையும் இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4) 01.01.2007ல் பூஜ்யமாக இருந்த பஞ்சப்படி இன்று 112.4%ஆக உயர்ந்துள்ளது. எனவே பஞ்சப்படியை உடனடியாக ஊதியத்துடன் இணைத்திட வேண்டும் என இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது. மேலும் ஊழியர்களுக்கு 01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்திற்கான பேச்சு வார்த்தையினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5) நரேந்திர மோடி அரசாங்கம் அமுலாக்கும் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக 2016, மார்ச் 10ஆம் தேதி எதிர்ப்பு தினத்தை கடைபிடிக்க வேண்டும் என மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்துள்ளன. BSNLஐ புத்தாக்கம் செய்வது என்கின்ற கோரிக்கையினையும் உள்ளடக்கி இந்த எதிர்ப்பு தினத்தை சக்தியாக நடத்திட வேண்டும் என இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6) வரும் இரண்டு மாதங்களில் வரவுள்ள கீழ்கண்ட தினங்களை சக்தியாக கொண்டாடிட வேண்டும் என விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

அ) மார்ச் 8 -சர்வதேச மகளிர் தினம்

ஆ) மார்ச் 22 - BSNL ஊழியர் சங்க அமைப்பு தினம்.

இ) மார்ச் 23 -தோழர்கள் பகத்சிங், சுக்தேவ் மற்றும் ராஜ்குரு ஆகியோரின் தியாக தினம்

ஈ) ஏப்ரல் 14 - டாக்டர் அம்பேத்கரின் 125ஆவது பிறந்த தினம்.

உ) மே 1 - மே தினம்.

7) இந்த விரிவடைந்த மத்திய செயற்குழுவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த மகாரஷ்ட்ரா மாநிலச் சங்கம் மற்றும் அஹமது நகர் தோழர்களுக்கு இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

எதிர்வரும் ஏழாவது சங்க அங்கீகார தேர்தலிலும் சிறப்பான வெற்றியை பெறுவோம், BSNLஐ லாபமீட்டும் நிறுவனமாக மாற்றிடுவோம், BSNL ஊழியர்களின் அனைத்து உரிமைகளையும் பெற்றிடுவோம், 01.01.2017 முதல் சிறப்பான ஊதிய உயர்வினை பெற்றிடுவோம் என்ற உறுதிப்பாட்டினை பங்கேற்றோர் மனதில் பதிய வைத்த அஹமது நகர் விரிவடைந்த மத்திய செயற்குழு உற்சாகத்துடன் நிறைவு பெற்றது. இந்த செயற்குழு கொடுத்துள்ள வெளிச்சத்தில் வெற்றி நடைபோடுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**